**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**
**S.C.No.95/2022**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.17** |
| **Name** | **:** | சூர்யா |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

எதிரி ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 08.12.2023.**

முதல் விசாரணை -

நான் விளை கிராமத்தில் குடியிருக்கிறேன். குடும்ப தலைவி. இறந்துபோன புருஷோத்தமனை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. அ.சா.3, அ.சா.2 ஆகியோர் என்னுடைய பெற்றோர்கள். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு என்ன தெரியும் என்றால் எதுவும் தெரியாது.

சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

19.10.2021ல் என் கணவர் வெளியில் வேலை பார்த்ததால் நான் என் தாயாருடன் தான் வசித்து வந்தேன் என்றால் சரி தான். எதிரி ராஜசேகர் வீட்டிற்கு பக்கத்து வீடு தான் என் அம்மா வீடு என்றால் சரி தான். அன்று இரவு 12.00 மணிக்கு மேல் என் அம்மாவின் அலறல் சத்தம் கேட்டதா என்றால் நான் தூங்கிக்கொண்டு இருந்தேன்.

என் அம்மாவின் அலறல் சத்தம் கேட்டவுடன் நான் என் அப்பா அம்மா வெளியில் வந்து பார்த்தோமா என்றால் இல்லை, நான் தூங்கிக்கொண்டு இருந்தேன். காலையில் தான் சம்பவம் பற்றி எனக்கு தெரியும். காலையில் எத்தனை மணிக்கு சம்பவம் குறித்து தெரியும் என்றால் காலை 9 மணிக்கு சம்பவத்தை பற்றி தெரியும். சம்பவத்தை பற்றி என்ன தெரியும் என்றால் பக்கத்து வீட்டுக்காரர் தீக்காயம் பட்டு மருத்துவமனையில் சேர்த்தது குறித்து தெரிந்துக்கொண்டேன்.

தீக்காயம் பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவரின் பெயர் என்ன என்றால் புருஷோத்தமன். அவருக்கு எப்படி தீக்காயம் ஏற்பட்டது என்று தெரிந்துக்கொண்டேனா என்றால் அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் சொன்னதன் அடிப்படையில் புருஷோத்தமன் மேலிருந்து தவறி கீழே விழுந்ததால் அடுப்பில் விழுந்து தீக்காயம் பட்டதாக தெரிந்துக்கொண்டேன்.

நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரணை செய்தபோது வாக்குமூலத்தில் உள்ளவாறு வாக்குமூலம்

**அளித்துவிட்டு, தற்போது எதிரி என்னுடைய ஊர்க்காரர் என்பதால் அவரை காப்பாற்றவேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென்று எடுத்துரைக்கப்பட்டது.</u>**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./ K. Vijaya,
Additional Sessions Judge,
Arani.